
# ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,124 ஆடி மாதம்

# பதினெட்டம்மன் அருட்போர் அருட்படை வியூகம்



'இந்து' என்ற சொல் தமிழ்ச் சொல்லே! இது இளமுறியாக் கண்டத்துள் பிறந்த சொல். நமது தமிழ்ச் சங்க இலக்கியங்கள் அனைத்தும் கிடைக்கவில்லை. கிடைத்தவற்றில் மதநூல் பற்றியது எதுவும் கிடைக்கவில்லை. வடஆரியர்களின் சூழ்ச்சியால் 'ஹிந்து' என்ற ஒரு புதிய சொல் உருவாக்கப்பட்டு 'இந்து' என்ற சொல் அழிக்கப்பட்டது. எவருமே தங்களுடைய சொற்பொழிவுகளில், அறிவுரைகளில் இந்துமதம், ஹிந்துமதம் என்று தலைப்பிட்டுப் பேசுவதில்லை.

இந்துமதத் தந்தை, இந்துவேத நாயகம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.

இந்து இலக்கியக் கழக வெளியீடு

# உள்ளுறை

1. **பதினெண்சித்தர் திருச்சபை** - 1991இல் குருதேவர் தலைமையில் அமைக்கப்பட்ட அறக்கட்டளையின் நோக்கங்கள், கொள்கைகள், செயல்திட்டங்கள் பற்றி குருதேவர் தயாரித்திட்ட அறிவிக்கை.
2. **அருளாட்சி நாயகத்தின் பருவபூசை பற்றிய செயல்விளக்கத் திருவோலை** - தென்மண்டலத்தார் மூலம் அனைத்து அடியான்களுக்கும் காலச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அருளாட்சி நாயகம் வழங்கிய பருவபூசை செய்வது பற்றிய செயல்விளக்கத் திருவோலை.
3. **பதினெட்டம்மன் அருட்போர் அருட்படை வியூக அமைப்பு தீச்சட்டி திருவிழா அறிவிப்பு** - அருட்கணிப்பு செய்வது பற்றியும், அருட்பணி ஆற்றுவது பற்றியும் வழங்கப்பட்ட குருவாணைகளில் சில.
4. **வீரத் திருமகளுக்கு குருதேவரின் வாழ்த்து மடல்** - சிறுமுகையைச் சேர்ந்த அருட்குடும்பத்தின் சிறுமிக்கு குருதேவர் எழுதிய வாழ்த்து மடல்.
5. **தமிழ்நாட்டிற்கு இந்துமத வழியாகத் தொண்டாற்ற வருக!** - திருநின்றவூரைச் சேர்ந்த புதிய அறிமுகத்தாருக்கு குருதேவர் வரைந்த சுருக்க விளக்க அஞ்சல்.
6. **மெய்யான இந்துமதத்தைப் புரிந்து பயனடையுங்கள்** - அச்சிட்ட அறிக்கைக்காக தயாரிக்கப்பட்ட சிறிய விளக்கக் கட்டுரை.
7. **புத்தர் வாக்கு** - 32வது புத்தர் கூறிய கருத்துக்களின் சாராம்சத்தை 11வது பதினெண்சித்தர் பீடாதிபதியின் குருபாரம்பரியத்திலிருந்து எடுத்து குருதேவர் வழங்கிய சிறு குறிப்பு.

# பதினெண்சித்தர் திருச்சபை அறக்கட்டளை

**தன்னையறிந்தால் தலைவனை அறியலாம்!**
**தலைவனை அறிந்தால் தன்னை அறியலாம்!**
**- சித்தர் நெறி**

*C.No. D.I.T.(E)/2(259)/90-91*

## பதினெண்சித்தர் திருச்சபை

இம்மண்ணுலகின் பயிரினங்களுக்கும், உயிரினங்களுக்கும் உரிய அகப் பண்பாட்டினையும், புற நாகரிகத்தினையும், மற்ற வாழ்வியல் நெறிமுறைகளையும், உரிமை முறைகளையும், பழக்க வழக்கங்களையும் உருவாக்கிக் கொடுத்தவர்கள் பதினெண்சித்தர்களே. இதற்காகப் பதினெண்சித்தர்கள் உருவாக்கிய நிறுவன நிருவாகங்களில் ஒன்றே இந்தப் பதினெண்சித்தர் திருச்சபை.

கடலுள் மறைந்த குமரிக்கண்டம் எனப்படும் இளமுறியாக் கண்டத்திலே இன்றைக்கு கி.பி.1991 என்ற கணக்குப்படி 43,73,092 ஆண்டுகளுக்கு முன்னால்; இம்மண்ணுலகில் அனைத்துக்கும் தலைவர்களாக மண் + தலைவன் = மண் + ஈசன் => மணீசன் என்று வாழ்ந்து கொண்டிருந்த உயிரினத்தை பக்குவப்பட்ட மனதையுடைய மனிதனாக மாற்றுவதற்காக இம்மண்ணுலகின் முதல்மொழியாகப் பதினெண்சித்தர்களால் வழங்கப்பட்டதே அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழி. அதாவது, பதினெண்சித்தர்களின் தாய்மொழியாகவும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியாகவும் உள்ள அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியே,

இம்மண்ணுலகின் பூர்வீகக் குடிகளான மணீசர்கள் எனும் கற்கால மணீசர்களைப் பண்படுத்தி மனிதர்களாக்கிற்று. எனவே, தமிழ்மொழியின் வரலாறும், தமிழ் இலக்கியத்தின் வரலாறுமே இம்மண்ணுலகின் மனித குல வரலாற்றை முறையாகவும், நிறைவாகவும் விளக்க வல்லவை. இத் தெய்வீகச் செந்தமிழ் மொழியே பிண்டங்களையும், அண்டங்களையும், பேரண்டங்களையும், அண்டபேரண்டங்களையும்; இவற்றின் தோற்ற மாற்ற ஏற்ற இறக்க இயக்கங்களையும் முழுமையாக விளக்க வல்லதாகும்! முழுமையாக விளக்க வல்லதாகும்! முழுமையாக விளக்க வல்லதாகும்!

இவற்றிற்கெல்லாம் மேலாக, இந்த அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழி பல்லாயிரக்கணக்கான கல் தொலைவு பரப்பளவை உடைய இம்மண்ணுலகின் முதல் நிலமான இளமுறியாக் கண்டத்தில் யுகயுகமாக இருந்து வருகிறது. எனவே, இதனுடைய கிளை மொழிகளாகத் தோன்றிய நூற்றுக்கணக்கான மொழிகளே உலகின் தட்ப வெப்ப நிலைகளுக்கும், சூழ்நிலைகளுக்கும், வசதி வாய்ப்புகளுக்கும் ஏற்ப; ஆலமரத்தின் கிளைகளைப் போலவும், விழுதுகளைப் போலவும் உலகெங்கும் பரந்து விரிந்து வளர்ந்திருக்கின்றன. இப் பேருண்மைகளால், இம்மொழியின் வாழ்வியலும், வரலாறுமே; ஏறத்தாழ இம்மண்ணுலகம் முழுவதும் தோன்றியுள்ள எல்லா இனத்தார்களின் பண்பாடுகளையும், நாகரிகங்களையும், இவை சார்ந்த அறிவியல்களையும், கலைகளையும் விளக்க வல்லனவாக இருக்கின்றன என்ற இப்பேருண்மை தெளிவாகிறது.

பதினெண்சித்தர்கள் தொடர்ந்து வாழையடி வாழையென தோன்றிக் கொண்டேயிருப்பதால்; இவர்கள் இம்மண்ணுலகம் முழுவதும் அடிக்கடி சென்று சுற்றிப் பார்த்து உலகம் தழுவிய சமயம், சமுதாயம், அரசியல், கலை, இலக்கியம், மருத்துவம், தொழில், அறிவியல்,

மொழி, ... முதலிய அனைத்துத் துறைகளைப் பற்றிய செய்திகளையும், தமிழ்மொழியின் காலக்கணக்கீட்டு அடிப்படையில் மிகமிகத் தெளிவான முறையில் எழுதியிருக்கிறார்கள். மேலும், கடலுக்குள் மறைந்திட்ட இளமுறியாக் கண்டம் எனும் குமரிக் கண்டத்தின் பனிமூடிய தென் இமயமலை, தென் கங்கை, தென் யமுனை, தென் இந்து, பஃறுளி, குமரி, ... முதலிய ஆறுகள் பாய்ந்து வளப்படுத்திய நிலப்பகுதிகளில்; இன்றைக்கு 43,73,092 ஆண்டுகளுக்கு முன்பு தென் இந்து ஆற்றங்கரையில் நிறுவிய ‘அருட்பா’, ‘மோகம் சிதரு’ எனும் இரு நகரங்களில் தமிழ்மொழியையும், தமிழ்மொழியின் வேதமான இந்து வேதத்தையும், இந்து வேத மதமான இந்து மதத்தையும் தோற்றுவித்து வளர்த்தார்கள், பதினெண்சித்தர்கள். அவை நல்ல பக்குவ நிலையை அடைந்த பிறகு அவற்றை பஃறுளி ஆற்றங்கரையில் புதிதாகத் தோற்றுவித்த தொன்மதுரையில் இம்மண்ணுலகின் முதல் அரசான பாண்டிய அரசைத் தோற்றுவித்து; அதன்மூலம் முத்தமிழ்ச் சங்கத்தையும், பதினெண்சித்தர் மடம், பீடம், கருகுலம் எனும் நிறுவனத்தையும் தோற்றுவித்து வளர்த்தார்கள்.

அப்படி, இவர்கள் இம்மண்ணுலகில் தமிழையும், இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் சட்டப்பூர்வமாக அறிவித்தது முதல் இன்று 1991 வரையுள்ள மிகப் பெரிய கால இடைவெளியான 43,73,092 ஆண்டுகளுக்குரிய எல்லாத் துறைகளைப் பற்றிய வரலாற்றினையும்; இந்தத் தமிழ்ச் சங்கம் அரசியல் பூர்வமாக அறிவிக்கப்பட்ட அடிப்படையில், இந்து வேத மதம் அரசியல் பூர்வமாக அறிவிக்கப்பட்ட அடிப்படையில் துவங்கி முறையான காலக்கணக்கீட்டு அடிப்படையில் இந்த 43,73,092 ஆண்டுகளுக்குரிய வரலாறு மிக மிகத் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டுக்கணக்கு பதினெண்சித்தர் இந்து வேத ஆண்டு அல்லது இந்து வேத மதமான இந்து மத ஆண்டு என்று குறிப்பிடப்படுகிறது. இதே அடிப்படையில்தான் ஒவ்வொரு யுகத்தின் ஆண்டுகளுக்கும் அந்த யுகத்தின் பெயராலும்,

யுக நாயகர்களில் சிலரின் பெயராலும்; - எடுத்துக்காட்டாக கிரேதகா யுக ஆண்டுக் கணக்கு, திரேதகாயுக ஆண்டுக் கணக்கு, துவாபர யுக ஆண்டுக் கணக்கு, கலியுக ஆண்டுக் கணக்கு, சிவன் ஆண்டுக் கணக்கு, முருகன் ஆண்டுக் கணக்கு, முதல் பதினெண்சித்தர் பீடாதிபதியான அனாதிக் கருவூரார் ஆண்டுக் கணக்கு, வட கங்கைக்கரை இராமதேவன் ஆண்டுக் கணக்கு, வட யமுனைக்கரை கண்ணதேவன் ஆண்டுக் கணக்கு, விக்கிரமாதித்தன் ஆண்டுக் கணக்கு என்று - பல கணக்கற்ற ஆண்டுக் கணக்கு முறைகள் பதினெண்சித்தர்களால் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை ஒட்டியே சீனர்களின் ஆண்டுக் கணக்கு, சோனகர்களின் ஆண்டுக் கணக்கு, இசுலாமிய வேத மத ஆண்டுக் கணக்கு, கிறித்தவ வேதமத ஆண்டுக் கணக்கு என்று சில ஆண்டுக் கணக்கு முறைகள் உலகெங்கும் தோன்றின. இப்படி உலகுக்கே ஆண்டுக் கணக்கீட்டு முறையை (The Calendar System) வழங்கிய பெருமை பதினெண்சித்தர்களுடைய தமிழ்மொழிக்கும், இந்து வேதத்திற்கும், இந்து வேத மதமான இந்து மதத்திற்கும், இந்து மத நாடான இந்தியாவிற்கும் உரியதாகிறது.

இப் பதினெண்சித்தர்கள் அருட்கொடையாகவும், அறிவுக் கொடையாகவும் வழங்கியுள்ள இந்து வேதத்தின் மூலமும், இந்து வேத மதமான இந்து மதத்தின் மூலமும் மிகப்பெரிய அளவில் பிண்டம், அண்டம், பேரண்டம், அண்டபேரண்டம்; இம்மண்ணுலகம், இம்மண்ணுலகின் ஈர்ப்பு சத்திக்குட்பட்ட 27 விண்மீன்கள், 12 இராசிகள், 9 கோள்கள், 7 நாள்கள், 2 நிழல்வடிவக் கோள்கள்; அனைத்து வகைப்பட்ட பயிரினங்கள், உயிரினங்கள்; மனிதனுடைய ஆவி, ஆன்மா, ஆருயிர்; மனிதனின் முற்பிறப்பு, இப்பிறப்பு, மறுபிறப்பு; இந்த உலகம் சேர்ந்த 18 வகைப்பட்ட கடவுள்கள்; இக்கடவுள்களில் பிறப்பவர், இருப்பவர், இறப்பவர், பிறவாயாக்கைப் பெரியோர், இறவாயாக்கைப் பெரியோர், பிறப்பிறப்பற்ற பெருநிலை பெற்றோர் எனும் 6 வகைப்பட்ட கடவுள் நிலையினரைப் பற்றிய விளக்கம்; உலகியலுக்குரிய அல்லது

பொருளியலைச் சார்ந்த ஞானம், அகஞானம், புறஞானம், மெய்ஞ்ஞானம், விஞ்ஞானம் எனும் ஐந்து வகைப்பட்ட அறிவியல்கள்; முதலிய அனைத்தையும் முறையாகவும், நிறைவாகவும் முழுமையாக விளக்கி இருக்கிறார்கள். இந்தப் பதினெண்சித்தர்கள் கணிப்புப்படி, இந்த மண்ணுலகம் முடிவதற்குள் 48 பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றுவார்கள்; இவர்கள் ஒவ்வொருவரும் பதினெண்சித்தர் திருச்சபைகளை நிறுவி பதினெண்சித்தர்களின் அருட் கொடைகளையும், அறிவுக் கொடைகளையும் அந்தந்தக் காலச் சூழ்நிலைகளுக்கும், வசதிவாய்ப்புகளுக்கும், அறிவியல் வளர்ச்சி நிலைகளுக்கும், மக்களின் தேவைகளுக்கும் ஏற்ப விரித்துரைத்து வளர்த்துக் காத்துப் பயன்படுத்திடுவார்கள். இதன்படியே, தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய ஞானாச்சாரியார், ஞான வேந்து, குவலய குருபீடம், அருட்கொடை வள்ளல், இந்துமதத் தந்தை, தத்துவ நாயகம் ஆகிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் பதினெண்சித்தர் திருச்சபையைத் தோற்றுவித்துச் செயல்பட்டதற்குப் பிறகு; சுமார் 900 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு அவருடைய மகள் வயிற்றுப் பேரராக இன்று தோன்றியுள்ள பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியான ஞானாச்சாரியார், ஞான வேந்து, குவலய குருபீடம், அருட்கொடை வள்ளல், இந்துமதத் தந்தை, இந்துவேத நாயகம், தத்துவ நாயகம், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் இப்பொழுது தம் காலத்தில் பதினெண்சித்தர் திருச்சபையைத் தோற்றுவித்துள்ளார். இதன் மூலம் அனைத்து வகைப்பட்ட துறைகளையும் உலகம் தழுவிய நிலையில் தமிழ்மொழி வாயிலாக விளக்கி நற்பணியாற்றிட அனைவரையும் அழைக்கிறார். இதற்கென அறக்கட்டளை நிறுவப்பட்டுள்ளது. இந்த அறக்கட்டளைக்கு எல்லோரும் தங்களால் முடிந்த உதவிகளை வழங்கிடுமாறு வேண்டப்படுகிறார்கள். பதினெண்சித்தர் திருச்சபை

உலக மானுட நல மேம்பாட்டிற்காகவும், வளவளர்ச்சிக்காகவும், வலிமைச் செழிச்சிக்காகவும், சமாதான நல்லுறவுக்காகவும் பாடுபட முன்வந்திருக்கிறது. இப் பேருண்மையினை அனைவரும் புரிந்து; இத் திருச்சபையின் வளர்ச்சிக்காக, அனைத்து வகையான ஒத்துழைப்புக்களையும், உதவிகளையும் தந்து உதவுமாறு வேண்டப்படுகிறது, வேண்டப்படுகிறது, வேண்டப்படுகிறது.

**பதினெண்சித்தர் திருச்சபை அறக்கட்டளை:-**

1) அறங்காவலர் குழு தலைவர், ஞானாச்சாரியார்
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்
(டாக்டர்) ப.கிருட்டிணமூர்த்தி M.A., (Ph.D.)
2) டாக்டர் இரத்தினா கிருட்டிணமூர்த்தி B.Sc., M.B.,B.S.,
3) லோ.மல்லிகா,
4) வெ.செகதீசன் B.Sc.,
5) செ.கார்த்தியாயினி
6) ச.துரைராசன் B.Sc.,
7) இரா.சீனிவாசன் B.B.A.,
8) பெ.சுப்பையா B.E.,
9) சு.இராசு
10) கு.இரவிமணி B.Sc., B.Tech.
11) இரா.சண்முகானந்தன் B.E.,
12) த.செயக்குமார் B.Tech.

**குறிப்பு:-** இப் பதினெண்சித்தர் திருச்சபை நமது அரசாங்க வருமான வரி சட்டப்படி (80G) வருமானவரி விதிவிலக்குப் பெற்றிருக்கிறது. இதனுடைய செயல்திட்டங்களின்படி, பதினெண்சித்தர்களின் தத்துவ அடிப்படையிலும், செயல்சித்தாந்த அடிப்படையிலும் பாலுகர் பள்ளி, சிறுவர் பள்ளி, நடுநிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளி, கல்லூரி, முதியோர் காப்பகம், அனாதை விடுதி, இலவச மருத்துவமனை, ஓகயோகப் பயிற்சிச் சாலை, சித்த மருத்துவ மூலிகை ஆராய்ச்சிக்

கழகம், ... முதலிய பல்வேறு நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளன. இவற்றின் மூலம் பதினெண்சித்தர்களின் உலகம் தழுவிய மானுட நல மேம்பாட்டுக் கொள்கையும், குறிக்கோளும் சிறப்பாகச் செயலாக்கப் பட உள்ளன என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இம் மாபெரும் செயல்திட்டங்களுக்கு உங்களால் இயன்ற அனைத்து வகையான உதவிகளையும் வழங்குமாறு வேண்டுகிறோம், வேண்டுகிறோம், வேண்டுகிறோம்.

நன்றி, நன்றி, நன்றி.

வணக்கம், வணக்கம், வணக்கம்.

# பதினெண்சித்தர் திருச்சபையின் செயல்திட்டம்

# கொள்கையும் குறிக்கோளும்

1. சித்தர் மருத்துவமான யாகம், யக்ஞம், ஓகம் போன்றவற்றைப் பயன்படுத்திச் செய்யக்கூடிய ஒளி மருத்துவ முறைகளையும்; மந்திரம், எந்திரம் போன்றவற்றைப் பயன்படுத்திச் செய்யக்கூடிய ஒலி மருத்துவ முறைகளையும்; மற்றுமுள்ள தமிழ் மருத்துவ முறைகளையும் ஆராய்ச்சி செய்யக் கூடிய ஆராய்ச்சி நிலையங்களையும் தோற்றுவித்தல், நிறுவுதல், நிருவகித்தல், மேற்கூறிய செயல்களுக்கு ஊக்கம் தருதல், பண முதலீடு செய்தல், உதவுதல்.

2. பொதுமக்களுக்கு நலமளிக்கக் கூடிய உடல்நோய் மருத்துவமனைகளையும், மருத்துவ மையங்களையும், இலவச மருந்தகங்களையும்; உயிர்நோய் தெய்வீக மருத்துவமனைகளையும், மருத்துவ மையங்களையும், இலவச மருந்தகங்களையும் தோற்றுவித்தல்,

நிறுவுதல், நிருவகித்தல், மேற்கூறிய செயல்களுக்கு ஊக்கம் தருதல், பண முதலீடு செய்தல், உதவுதல், ஆதரவு தருதல்.

3. மக்களுக்கு மூலிகை மருந்துகள், மூலிகைப் பற்பொடி, ... தயாரித்து வழங்கத் தேவையான எல்லாவிதமான மூலப் பொருட்களையும், மூலிகைப் பொருட்களையும் வழங்குதல், வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

4. இந்தியப் பழங்கலைகளான வரியியல், பிறப்பியல், வாசியோகம், ஞானக்கண், குண்டலினி உள்ளிட்ட எல்லாவகையான சித்தர் ஞானங்களையும், அறிவியல்களையும், கலைகளையும் பொதுமக்களிடையே பேணி வளர்த்தல், கற்பித்தல், பயிற்றுவித்தல், ஆராய்தல், பரப்புதல்.

5. மத்திய அரசால் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடம், தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடம், கலை நுட்பங்கள் மிகுந்த இடம், நாடு முழுவதும் உள்ள மக்கள் அல்லது மாநிலம் முழுவதும் உள்ள மக்கள் சென்று வழிபடக் கூடிய புகழ் வாய்ந்த இடம் என்று அரசு ஆவணங்களில் அறிவிக்கப்பட்ட கோயில்கள், மசூதிகள், குருத்துவாராக்கள், தேவாலயங்கள், பிற இடங்கள் முதலியவைகளைப் புதுப்பித்தல், பழுதுபார்த்தல், அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தல்.

6. பழமையான கலைகளையும், சித்தர்களின் பண்பாடுகளையும் பரப்புவதற்கும், வளர்ப்பதற்கும், முன்னேற்றுவதற்கும் தேவையான புத்தகங்களை, சிறு புத்தகங்களை, அறிக்கைகளை, நாளிதழ்களை வெளியிடுதல், அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தல்.

7. அனாதைகள், ஆதரவற்றோர், உடல் ஊனமுற்றோர், வயோதிகர்கள் உள்ளிட்ட ஏழைகளுக்கும், தகுதியானவர்களுக்கும், தேவையானவர்களுக்கும் உணவு, உடை, உறையுள், மருத்துவ வசதி மற்றும் பல உதவிகள் வழங்குதல், அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தல்.

8. கல்வி முன்னேற்றத்திற்காக பள்ளிகள், கல்வி நிறுவனங்கள், கல்விக் கூடங்கள், ... முதலியவைகளை ஆரம்பித்தல், நிறுவுதல், நிருவகித்தல், வளர்த்தல், நடத்துதல், பணமுதலீடு செய்தல், ஆதரித்தல், அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தல்.

# அறங்காவலர் குழு
# பதினெண்சித்தர் திருச்சபை

இத் திருச்சபையின் கொள்கைகள், செயல்திட்டங்கள் பற்றி மேலும் அறிய விரும்புவோர் தொலைபேசி ~~(654447)~~, கடிதம் மூலமாகத் தொடர்பு கொள்ளலாம்.

திருச்சபைக்கு நன்கொடை அளிக்க விரும்புவோர் காசோலை/ DD/M.O. மூலமாக அனுப்பலாம்.

**அனுப்ப வேண்டிய முகவரி**:- ~~Phone: 654447~~

பதினெண்சித்தர் திருச்சபை
~~13, குமாரசாமித் தெரு,~~
~~வரதராசபுரம், அம்பத்தூர், சென்னை-53~~

“இத் திருச்சபைக்கு அளிக்கப்படும் நன்கொடைக்கு வருமான வரி விதிவிலக்கு (1961-(80G)இன் படி) வழங்கப்பட்டிருக்கிறது.”

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: அச்சிட்ட அறிவிக்கையாக இருந்தது.//**
**குறிப்பு:- இந்தக் கட்டுரையின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரி, தொலைபேசி எண், அறக்கட்டளை முதலியவை தற்போது செயலில் இல்லை என்பதால் அவற்றைப் பயன்படுத்திட வேண்டாம்.**

தலைமைப்பீடம்,
26-1-91.

# அருளாட்சி நாயகத்தின் பருவபூசைப் பற்றிய செயல்விளக்கத் திருவோலை.

அண்டபேரண்ட அருட்பேரரசர் அருளாட்சி நாயகம், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய குருமகாசன்னிதானம், பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி ஞாலகுரு சித்தர் தாத்தா காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களது ஆணைப்படி குருவாணைத் திருவோலை நாயகம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அறிவிக்கும் செயல்விளக்கத் திருவோலை.

1) அனைத்தும் தாத்தாக்கள், ஆத்தாக்கள் செயலே! அம்மையப்பன்கள் திருவருளே!

2) மண்டலங்கள் தோறும் நடைபெறும் பருவபூசைகள் பகற்பொழுதில் 1½ மணிக்குள்ளாகவும், இரவுப் பொழுதில் 8½ மணிக்குள்ளாகவும் நிகழ்த்தப்பட்டாக வேண்டும். எக்காரணம் கொண்டும் மேற்படி கூறிய மணி அளவிற்கு மேல் பூசைகள் நடைபெறக் கூடாது.

(a) 1¼ மணி நேரம் பூசை செய்வதாக இருந்தால் நான்கு காயந்திரி மந்தரங்களை மட்டும் கூற வேண்டும். (காயந்திரி, சத்தியே காத்தாயி, வாஞகி மண்ஞகி, கற்பூர சோதி மந்திரம்).
(b) 2½ மணி நேரம் பூசை செய்வதாக இருந்தால் சிவபுராணமும் சேர்த்துப் பாட வேண்டும்.

இவ்வாறு மந்திரம் சொல்லிய பிறகு;

*"அனைத்து வகையான தாத்தாக்களே, ஆத்தாக்களே வருக!*
*அனைத்து வகையான அம்மையப்பன்களே வருக!*
*தாத்தா அருளாட்சி நாயகமே வருக!*
*எங்களது குருதேவரே வருக!"*

என்று அறிவிப்பு செய்து பலி கொடுக்க வேண்டும்.

3) பிறகு கண்களை மூடி இரண்டு நிமிடம் குருவை நினைத்து அமர்ந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு**:- இந்தப் பருவபூசைகளில் ஆதிசிவனும், முருகப்பெருமானும், அனைத்துப் பீடாதிபதிகளும், 18 அம்மன்களும் உறுதியாக வருவார்கள், அனைவரையும் வாழ்த்துவார்கள். அனைவருக்கும் அருள் கிடைக்கும்.

**பலி பற்றிய விளக்கம்**:- இறைச்சி உணவோ (அல்லது) இறைச்சியோ (அல்லது) இரத்தப் பொறியல் (அல்லது) குடல்கறி (அல்லது) குருதிப் பலியோ யாகத்தில் போட வேண்டும். படையலில் பாதி அளவை யாகத்தில் போட்டு மீதமுள்ள படையலை பூசை முடிந்த பிறகு சிவப்பு வேட்டி (அல்லது) சிவப்பு துணி அணிந்திருப்பவர்களுக்கு மட்டும் கொடுக்கப்படல் வேண்டும். சிவப்புத் துணி அணியாதவர்க்கு படையல் கிடையாது.

பருவபூசையில் கலந்து கொள்பவர்கள் முழங்காலுக்கு மேல் வேட்டியை மடித்து கட்டியிருக்க வேண்டும். 6 முழம் துண்டு இடுப்பில் கட்ட வேண்டும். முக்கியமாக உச்சிக்குடுமியனாக இருத்தல் வேண்டும்.

4) பருவபூசையில் கலந்து கொள்பவர்களிடையே எக்காரணம் கொண்டும் தனிப்பட்ட விமர்சனம் கூடாது, கூடாது, கூடாது, கூடவே கூடாது. பருவபூசைக்கு வருபவர்கள் பத்தியுணர்வோடு

யாகத்திற்கு அருகில் இருக்க வேண்டும். கருவறை முன்பு சாமி கும்பிடுவது போல் அடக்க ஒடுக்கத்துடன் இருக்க வேண்டும்.

5) பருவபூசையில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் தாத்தாவால், குருதேவரால், தாத்தாக்கள் ஆத்தாக்களால் மந்திரிக்கப் படுகிறார்கள். ஆதலால், எந்தத் தனிமனிதரும் மந்திரிக்கத் தேவையில்லை.

6) இரண்டு நிமிட மனம் ஒன்றுதலுக்குப் பிறகு இந்துமதம், இந்துவேதம் பற்றி பேசுதல் வேண்டும். ஏனென்றால், பருவபூசையை அ.வி.தி. செயல்பாட்டிற்கும், நிர்வாகக் குழுவை இ.ம.இ. செயல்பாட்டிற்கும் பிரித்துச் செயல்படுதல் வேண்டும்.

(a) பிறகு பொறுப்பாக இருந்து செயல்படுபவர்கள் கடைசியாக வந்த குருவாணையைப் படிக்க வேண்டும்.
(b) யாராவது தலைமைப்பீடம் சென்று வந்தாலோ அல்லது அருட்கணிப்பு செய்து வந்தாலோ அது பற்றிப் பேசலாம்.
(c) கூடுமானவரை தனிப்பட்ட நபர்கள் தங்களுக்கு வந்த கடிதங்களை படித்துக் காட்டவோ அல்லது தெரிவிக்கவோ வேண்டும்.
(d) பொறுப்பில் உள்ளவர்கள் அடுத்த பருவபூசை வரை உள்ள செயல்திட்டங்களை அறிவித்துச் செயல்பட வேண்டும்.

7) பலி என்பது குருதிதான், படையலை எந்த வீட்டிலும் தாத்தாக்கள் ஆத்தாக்களை அறிவிப்பு செய்து போடலாம். யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம்.

8) பருவபூசை முடித்துப் போகும் முன்பு இரண்டு நிமிடம் கண்ணை மூடி அமர்ந்திருந்து தாத்தா, குருதேவர் பட்டங்களைக் கூறி தாத்தாக்கள், ஆத்தாக்களை தங்களுக்குப் பாதுகாப்பாகவும், துணையாகவும், அனைத்தையும் வெற்றியாக்கிடவும் இருக்க வேண்டிக் கொள்ளல் வேண்டும்.

9) எவ்வளவு தொகை வசூல் ஆகிறதோ, அதற்குள் பருவபூசையை நிகழ்த்த வேண்டும்.

10) மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மண்டல மையப் பருவபூசை நடைபெறும். இரண்டு தடவைக்கு மையப் பருவபூசையில் கலந்து கொள்ளாதவர்கள் தாத்தாக்கள், ஆத்தாக்களால் கைவிடப் படுவார்கள். இந்தப் பருவபூசையில் கலந்து கொள்ளாதவர்கள் தலைமைப்பீடத்திற்குத் தெரிவித்தால், தலைமைப்பீடம் தாத்தாக்கள், ஆத்தாக்களிடம் பரிந்துரை மட்டும்தான் செய்யும். பரிகாரம் உறுதி கிடையாது. அருளுலகப் பாதுகாப்பும் கிடைக்காது.

11) மூன்று மாதத்துக்குரிய பருவபூசை மையத்தை தலைமைப்பீடம் மண்டலங்களுக்கு அறிவிக்கும். இதில் கட்டாயம் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும். அனைவருக்கும் போர்க்கால போர்க்கோல பாதுகாப்பு கிடைக்கும்.

12) பருவபூசையில் கலந்து கொள்பவர்கள் முன்கூட்டியே தலைமைப்பீடத்திற்கு தெரிவித்தால் உறுதியான பாதுகாப்பு கிடைக்கும். கலந்து கொண்டபிறகு தெரிவித்தால் வாழ்த்துச் செய்திகள் மட்டும்தான் தெரிவிக்கப்படும்.

13) வாராவாரம் புதன்கிழமை அனைத்து சன்னிதானங்களும் தலைமைப்பீடத்திற்கு அஞ்சல் எழுத வேண்டும் என்ற குருவாணை இத்துடன் பிறப்பிக்கப் பட்டுள்ளது. அப்பொழுது கூட பருவபூசையில் கலந்து கொள்வது பற்றி தெரிவிக்கலாம்.

14) நம்மவர்கள் குருவாணையின்படி நடந்தால் இந்த அருட்போரில் நம்மவர்களுக்கு அழிவு கிடையாது.

15) பருவபூசையை முடித்து விட்டு வந்த பிறகு நம்மவர்களுடன் இயக்க வளர்ச்சி பற்றிப் பேசலாம்.

16) பரிகாரங்களுக்காக இதர நாட்களில் சுடலைக்குச் செல்ல, உடனடியாகத் தலைமைப்பீடத்திற்குத் தகவல் தெரிவித்து விட வேண்டும்.

a) பாதிக்கப் பட்டவரின் முழு விவரம்,

b) குடும்பத்திலுள்ளவர்களின் வயது, பெயர், விவரம்.

c) ஒரு வருடத்திற்குள் அந்த குடும்பத்திற்குள் இறந்தவரது பெயர் விவரம்

.... முதலிய விவரங்கள் அனைத்தையும் தலைமைப்பீடத்துடன் தொடர்பு கொண்டு தெரிவித்தால், உறுதியாக உத்தரவு தரப்படும், பாதுகாப்புத் தரப்படும், பூசைமுறையும் சொல்லப்படும்.

17) அருளாட்சியின் பொருட்டு அ.வி.தி. தலைவர்கள், இணைத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், செயலாளர்கள், இணை துணைச் செயலாளர்கள், தண்டல் நாயகங்கள், மாதண்டநாயகங்கள் உடனுக்குடன் நியமிக்கப் படுவார்கள். எந்த ஒரு பதவியும் தனித்தன்மையுடையது அல்ல. ஏனென்றால், சித்தர்கள் கூட்டுத் தலைமையின் செயல்திட்டம் கொண்டவர்கள்.

18) அருட்போர் ஆரம்பமாகி விட்டதால் முன் நின்று செயல்படுபவர்கள் குருபாரம்பரிய மரபுப்படி பிறரை வரவழைக்கவோ (அ) தான் சென்று பார்க்கவோ என்று விரும்பினால் சம்பந்தப் பட்டவர்களுக்கு 2 அல்லது 3 நாட்களுக்கு முன்பாகவே தகவல் தெரிவித்து விட வேண்டும். அவ்வாறு தகவல் கிடைத்தது, குறிப்பிட்ட நேரத்தில் அவர்கள் இல்லையென்றாலோ அல்லது ஒத்துழைப்புத் தரவில்லை என்றாலோ உடனடியாகத் தலைமைப்பீடத்திற்குத் தெரிவிக்க வேண்டும். பிறகு யார் வந்தாலும் வராவிட்டாலும் முன் நின்று செயல்படுதல் வேண்டும். மேற்படி ஒத்துழைப்பு தராதவர்களுக்கு, **அருளாட்சி நாயகத்தின் ஆணைக் குறிப்பு** என்று தலைப்பிட்டு; ‘தங்களது செயல்பாடுகள் பற்றி அருளாட்சி நாயகத்திடம் தெரிவிக்கப்படும். தாங்கள் அருளாட்சி நாயகத்திற்கு பதில் சொல்ல

வேண்டி வரும். அவர் எடுக்கும் நடவடிக்கைக்கு உட்பட்டவராவீர்கள்' என்று தெரிவித்து விடல் வேண்டும். ஆகையால், நம்மவர்கள் உணர்ந்து செயல்படல் வேண்டும். அதுவே அருளாட்சி நாயகத்தை மகிழ்விக்கும் செயலாகும்.

**சிறப்புக் குறிப்பு**:- நமது சன்னிதானங்களில் யாராயினும் பருவபூசைக்கு வராதவர்கள் அருட்போர்க்கால முயற்சியிலேயே கடுமையாகப் பாதிக்கப் பட்டால் குருபீடத்தையோ, இயக்கத்தையோ குறை சொல்லக் கூடாது. எனவே, அனைவரும் பருவபூசையில் கலந்து கொண்டு செயல்பட்டே ஆக வேண்டும்.

நகல்கள் தயாரிப்பு:-

**தென்மண்டல நிர்வாகக் குழு,**

**மதுரை.**

**//உண்மை நகல்//**

**// மூலம்: சித்தரடியான் திரு ச. துரைராசன் அவர்களின் கையெழுத்தில் இருந்திட்ட நகல். //**

**அருளாணையின் அறிவிப்பு எண்: 001 / 91.**

தலைமைப்பீடம்,
12-3-91.
நள்ளிரவு 11:05 மணி.

# பதினெட்டம்மன் அருட்போர் அருட்படை வியூக அமைப்பு தீச்சட்டி திருவிழா அறிவிப்பு

கடந்த 3-1-91 இல் மேற்படி திருவிழா நிகழ்ந்த பிறகு மறுநாள் 4-1-91 இல் சென்னை கடற்கரை வளாகத்தில் பதினெண்சித்தர் திருச்சபை பதிவும், கடல் கடந்து நமது அருளாட்சி அமைப்புப் பணியின் வளவளர்ச்சிக்காக செய்யப்பட வேண்டிய சிறப்புப் பூசைகள் செய்தும்; ஞானாச்சாரியார், ஞான வேந்து, குவலய குருபீடம், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் அருளாட்சி நாயகமான தஞ்சைத் தாத்தாவின் அருளாணைகளில் இன்றைய அவசரத் தேவைக்காக சிலவற்றை மட்டும் குருவாணையாக அறிவிக்கின்றார்.

1) கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என நான்கு மண்டலங்களும் மாதம் ஒருமுறை கட்டாயமாக அனைத்து அடியான்களையும் அந்தந்த மண்டலத்துக்குள் ஏதேனும் ஒரு இடத்தில் மாற்றி மாற்றி; அதாவது ஒரு இடத்தில் கூட்டிய பிறகு அடுத்த கூட்டம் மறு இடத்தில்தான் நடைபெற வேண்டும். மண்டலத்தின் முக்கியமான இடங்களைத் தேர்ந்தெடுத்து முன்கூட்டியே அனைவருக்கும் தெரியப் படுத்திக் கூட்ட வேண்டும். (எழுத்துப் பூர்வமாக பதில் அஞ்சலுடன் Reply Card போட்டு தெரியப் படுத்த வேண்டும்.) முதல் நிர்வாகக் குழுக்

கூட்டத்திலேயே அடுத்த நிர்வாகக் குழு பற்றிய விவரம் தெளிவாகக் கூறி விட வேண்டும்.

2) நிர்வாகக்குழுக் கூட்டம் நடந்தவுடனேயே தீர்மானங்களை எழுதி அனைவரும் கையொப்பமிட்டு மறுநாளே தலைமைப்பீடத்திற்கு அனுப்பி ஒப்புதல் பெற்ற பிறகே செயல்படுத்த வேண்டும். தொடர்ந்து மூன்று நிர்வாகக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளாதவர்கள், தங்களுடைய அனைத்து அருளுலகத் தகுதியையும் இழப்பர்.

(குறிப்பு:- உறுப்பினர் தகுதியை அல்ல, மீண்டும் கருகுலம் வந்து பயிற்சி பெற்று புதியதாக அருட்சத்தி பெற வேண்டும். எந்தவிதமான உலகியல் காரண காரியங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.)

3) **அருட்கணிப்பு**:-

அருட்போர் அறிவிக்கப்பட்டு விட்ட காரணத்தினால், நமது அ.வி.தி. பணிக்கோ, இயக்கத்துக்கோ, தலைவருக்கோ, குருபீடத்திற்கோ; குற்றமோ, குறையோ, பழியோ வரக் கூடாது. இதனால் இது முதல் நம்மவர்கள் அருட்கணிப்பு கணிப்பதில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதாவது, எந்த வழக்காக இருந்தாலும் அவர்களுடைய செய்திகள் அனைத்தும் கேட்டு தலைமைப்பீடத்திற்கு எழுதி, என்ன அருட்கணிப்பு கணிக்கிறார்கள் அல்லது எழுதுகிறார்கள் என்பதையும் எழுதி; தலைமைப்பீடத்தில் இருந்து மிகத் தெளிவான கருத்தைப் பெற்று; பிறகுதான் அருட்கணிப்பு செய்ய வேண்டும். தலைமைப்பீடம் அநுமதி இல்லாமல் எவ்விதக் கருத்தும் கூறக் கூடாது. தாங்கள் மந்திரிக்கலாம், வாழ்த்தலாம். அவ்வளவுதான்.

4) எந்த வீட்டிற்கு அருட்கணிப்புக்குச் சென்றாலும், தனியாகச் செல்லாமல் இரண்டு மூன்று சன்னிதானங்கள் சேர்ந்துதான் சென்று பூசைகள் செய்ய வேண்டும். அருட்கணிப்பை அந்த உரிய

பாதிப்பாளர்களைத் தவிர மற்றவர்களை வைத்துக் கணிக்கக் கூடாது!? அருட்கணிப்பில் பங்கு பெறுகின்ற சன்னிதானங்கள் வசதி வாய்ப்புக்கு ஏற்ப யாகம் அல்லது குத்து விளக்கு ஏற்றி, வசதிப்பட்ட படையலைப் படைத்து, அருட்கணிப்பை கணிக்கப் போகின்ற சன்னிதானம் நூற்றெட்டு (108) முறை சத்தி காயந்திரி மந்தரம் (பூர்வ புலன்கள்...) ஓதி சிவபுராணத்தை முழுமையாகப் பாடி முடித்து; அருளாட்சி நாயகமான தஞ்சைத் தாத்தாவையும், அருளாட்சி குருவாணை ஓலைநாயகமான இன்றைய குருதேவரையும் வாழ்த்தி வணங்கிய பிறகே அருட்கணிப்பு கணிக்க வேண்டும். அப்படி கணித்ததை குருதேவருக்கு அனுப்ப வேண்டும். ஆனால், அதை அவர்களுக்குக் கூறாமல், குருதேவருக்கு அனுப்பி ஒப்புதல் பெற்ற பிறகே அவர்களுக்குக் கூற வேண்டும்.

**<u>குறிப்பு</u>**:- அருட்கணிப்பு செய்பவர்கள் அனைவரும் கட்டாயம் சன்னிதான உடையில் மெய்ஞ்ஞானக்கொடி, மயில்பீலியுடன்தான் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும்.

5) ஒவ்வொரு அடியானும் வாரம் ஒருமுறை கட்டாயம் தலைமைப்பீடத்திற்கு அஞ்சல் தொடர்பு கொள்ள வேண்டும். அதாவது, ஒவ்வொருவரும் வாரத்தில் எந்த நாள் அஞ்சல் எழுதுகிறீர்கள் என்பதை முன்கூட்டியே தெரியப் படுத்திட வேண்டும்.

6) அனைவரும் வாரப்பூசையில் கூடுமானவரையில் அந்தந்த வட்டாரத்தில் கலந்து கொள்ள வேண்டும். மற்றும் அந்தந்த வட்டாரத்தில் நடைபெறும் பருவபூசையின் போதும் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும்.

7) இனிமேல் (i) போர்க்கால போர்க்கோல படையின் சட்டதிட்டக் கட்டுப்பாடும், ஒழுங்கும்; (ii) வட்டார தலைவர்களுக்கும், மாவட்டத் தலைவர்களுக்கும், குருபீடத்திற்கும் உடனடி பணிவு; (iii) சொன்னதைச் செய்வது, (iv) எதிர்த்துப் பேசாமல் இருப்பது முதலிய விதிமுறைகள்

கட்டாயமாகப் பின்பற்றப்பட வேண்டும். அந்தந்த வட்டாரத்தில் உள்ள யாரைப் பற்றியும், எதைப் பற்றியும் விமரிசனம் செய்யக் கூடாது. எதைச் சொன்னுலும் தலைமைப்பீடத்திற்கு மட்டும் எழுத்துப் பூர்வமாகத் தெரிவிக்கலாம். தலைமைக்குக் கட்டுப்பட்டு நடக்க இயலாதவர்கள் சிறிது காலம் விலகிச் செயல்படலாம். இனிமேல் இராணுவ சட்டப்படி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். முக்கியமான பிறச்சினைகளைப் பற்றிப் பேசவோ அல்லது ஆலோசிக்கவோ தலைமைப்பீடத்திற்கு நேரடியாக வந்து கலந்து பேசி எந்த முடிவும் எடுக்க வேண்டும். அதுவல்லாமல் தனிப்பட்ட முறையில் யார் எந்த முடிவு எடுத்தாலும் கடுமையாகக் கண்டிக்கப்படுவார்கள். அதேபோல் முக்கியமான பிறச்சினைகளைப் பற்றிப் பேசிட நேரடியாக தலைமைப்பீடம் வரும்படி அழைப்பு விடுத்தாலும் எவ்வித உலகியல் காரணங்களும் கூருமல் உடனடியாக வர வேண்டும்.

<u>**குறிப்பு**</u>:-

(அ) குருவாணை, அருளாணை என எது வந்தாலும் அதை அப்படியே செயல்படுத்த வேண்டும். அதைச் செயல்படுத்த இயலாதவர்கள் விலகி நிற்கலாம். இந்தத் தேதியில் இருந்து இந்தத் தேதி வரை விலகி இருக்கிறேன் என முன் கூட்டியே குறிப்பிட வேண்டும். அல்லது நேரில் வந்து விளக்கம் கூற வேண்டும்.

(ஆ) அந்தந்த வட்டாரத்தில் இருந்து குறைந்தது ஐந்து (5) பேர்கள் சேர்ந்து வருவதென்ருல், மூன்று(3) அல்லது ஐந்து (5) நாட்கள் தலைமைப்பீடம் மற்றும் கருகுலத்திலும் பயிற்சி பெற்றுச் செல்லலாம்.

(இ) அருட்கணிப்புப் பெறுபவர்களுக்கு அவர்கள் பூசையில் ஓதிட “மனிதரைக் கடவுளாக்கும் பூசைமொழி முதற்பாகம்” புத்தகத்தை வழங்க வேண்டும். கட்டாயமாக உறுப்பினராகச் சேர்க்க வேண்டும்.

--- அருளாட்சி நாயகத்தின் அவசர அவசிய அருளாணைகளில் இந்த சில குருவாணையாக வழங்கப்படுகின்றன. மற்ற குருவாணைகள் விரைவில் வரும்.

அன்பு
ஞானச்சாரியார் அவர்கள் கூறிடத் தொகுத்து எழுதியவர்:
அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம்,
அருள்மிகு கோமதியம்மன் சன்னிதானம் & சத்தி பீடம்
தலைமைப்பீட எழுத்தர், சித்தரடியார் வேம்பை சீ.மணி
12-3-91 நள்ளிரவு 1:05 மணி.

**குருவாணை குறிப்பு:-**

இனிமேல் நம்மவர்கள் அருட்கணிப்பு நிகழ்த்துவதற்கு உரிய காணிக்கை பெறாமல், அவர்களாகவே மனமுவந்து கொடுக்கும் காணிக்கையை மட்டும் பெற்றுக் கொள்ளவும். ஆனால், கட்டாயமாக அருட்கணிப்பு பெறுபவர் பூசைமொழி முதற்பாகம் புத்தகத்தை (ரூ.20) பெற்றே ஆக வேண்டும். உறுப்பினராகச் சேர்ந்தே ஆக வேண்டும். மிகவும் ஏழை என்றால் இரண்டில் ஒன்றாவது கட்டாயம் செய்தேயாக வேண்டும்.

**ஞானச்சாரியார்,**
**~~அம்பத்தூர், சென்னை-53.~~**
**~~தொலைபேசி: 654447~~**

**//உண்மை நகல்//**
**//இதன் மூல நகல்: சித்தரடியார் வேம்பை திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# வீரத் திருமகளுக்கு குருதேவரின் வாழ்த்து மடல்

1) அன்பிற்கும், பேரார்வத்திற்கும், பெருவிருப்பத்திற்கும், அருளுலகப் பயிற்சிக்கும், அருளுலக முயற்சிச் சாதனைக்கும் உரியவளாக விளங்குகின்ற இளந்தளிரே! இளந்தளிர் மிகுந்த மலர்க்கொடியே! நீ வாழ்க! தழைத்தெழு நீ! அருள் மணம் பரப்பிடு! நீள் இருள் நீக்கும் நிலவாக ஒளிர்ந்திடு! காடு மணக்கும் கனிகளாகிடு! உன் சொற்கள் கற்பூர மணம் பெறட்டும்! அருளுலக உரிமையும், உறவும் உன் வடிவில் சிப்பிக்குள் தயாராகும் முத்தாகட்டும்! அருளுலகப் பேருண்மைகள் மறையாக, ஆழ்கடல் செல்வமாக, நிலவறைப் புதையலாக, கோட்டைக்குள் காக்கப்படும் செல்வமாக இருந்திடல் வேண்டும். நம் நாடும், மொழியும், இனமும் தலைநகரமில்லாத நாடாகவும், தலைவனில்லாத சேனையாகவும், கோட்டையில்லாத நகரமாகவும், அரசனில்லாத அரசாங்கமாகவும், மாற்றுந்தாயின் வளர்ப்பிலிருக்கும் அப்பாவி ஊமைப் பிள்ளையாகவும் இருக்கின்றன. எனவே, இந்தக் கறைகளையும், குறைகளையும், சிதைவுகளையும், சீரழிவுகளையும், சிக்கல்களையும், அடிமைநிலைகளையும், மிடிமை நிலைகளையும் அகற்றிட அருட்படை நடத்திப் போர் நிகழ்த்தப் போகின்ற வீரத் திருமகள் நீ. உன் நெஞ்சத்தில் கோழையுணர்வோ, சிந்தையில் ஏழையுணர்வோ முளைவிட்டு விடக் கூடாது! முளைவிட்டு விடக் கூடாது! முளை விட்டு விடக் கூடாது! இதுவே 500 கோடியாண்டுகளில் சாதித்திராத சாதனைகளையெல்லாம் சாதித்து வருகின்ற உன்னுடைய ஏற்புத் தந்தை, அருட் தந்தை, ஞானத் தந்தை, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூராரின் பாசமிகு கருத்து.

2) அன்பு மகளே! நீ வாய்விட்டுப் பேசக் கற்றுக் கொள்வது போல், உன்னுடைய கருத்துக்களை இனிமையாகவும், அழகாகவும், ஆழமாகவும், வெளிப்படையாகவும் இலக்கியச் சுவை ஊற்றெடுக்கும் வண்ணம் எழுதக் கற்றுக் கொள். காலமெல்லாம் கனவிலும், நனவிலும், சொல்லிலும், செயலிலும், எழுத்திலும் புரட்சிக்காரனுக வாழும் உன்னுடைய அருட் தந்தையின் பதிலியாக, புரட்சிச் செல்வியாக, புதுமைப் பெண்ணுக, எங்கும் எதிலும் விடுதலையை உருவாக்கித் தரும் வீராங்கனையாக வளர்ந்திடு. பேராற்றல் மிக்க சிற்பி புகழ்மிக்க சிலையைச் செதுக்க முற்படுவது போல் உன்னைக் குருபாரம்பரிய மரபுகளுக்கும், மறைகளுக்கும், முறைகளுக்கும், நெறிகளுக்கும் ஏற்ப உருவாக்குகிறேன் நான். இந்தச் சிந்தனைச் சிற்பி தயாரிக்கும் பேசும் பொற்சிலை நீ. உன்னை நீயே இரகசியம் காக்கும் பண்புள்ளவளாகவும்; உலகியல் கடந்து குருவோடும், ஞானத் தந்தையோடும் ஐக்கியமாகி அருளுலக வாரிசாக வளர்த்துக் கொள். வெற்றியுண்டாகட்டும்.

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரர்.**

To

அருள்மிகு சித்தர் மகள்,
செல்வி கோ. தாரகேசுவரி,
c/o திரு பழ.கோபால்,
6/504, திருவள்ளுவர் நகர், சிறுமுகை
கோவை மாவட்டம்

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# தமிழ்நாட்டிற்கு இந்துமத வழியாகத் தொண்டாற்ற வருக!

தலைமைப்பீடம்

16-3-1991

திருமிகு ப. செகநாதன் (எண் 13/1, 4 வது தெரு, கிருட்டிணபுரம், திருநின்றவூர் - 602024) அவர்களின் சமூகத்திற்கு குருபீடத்தில் இருந்து விடுக்கும் கருத்து விளக்க பதில் திருவோலை.

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! அம்மையப்பன்கள் திருவருளே!

2) அன்புடையீர்! தாங்கள் தமிழின் மீது வைத்திருக்கும் அளப்பரிய பற்றிற்கும், இந்துமதத்தின் மீது வைத்துள்ள நாட்டத்திற்கும், முதலில் தலைவர் குருதேவர் ஞானச்சாரியார் அவர்கள் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தாருக்கும் எல்லாவகையான நலன்களும், வளங்களும் கிடைத்திட வாழ்த்துகின்றார்.

3) தங்களின் 26-12-1990ஆம் நாளிட்ட அஞ்சல் உறை தலைமைப்பீடத்திற்கு 12-3-91ஆம் தேதியில் கிடைத்தது. குருதேவர் பதினெண்சித்தர் மடத்திற்கு சென்றிட்ட காரணத்தால் உடனடியாகப் பதில் எழுதியனுப்ப இயலவில்லை. நேற்று தலைமைப்பீடத்திற்கு குருதேவர் திரும்பியதும் தங்களின் அஞ்சல் படித்துக் காட்டி பதில் பெற்று உடனே தங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

4) தங்களுடைய வினாக்களுக்கு உரிய பதில்கள்; இருபது ஆண்டுகளுக்கும் மேலாக பதினெண்சித்தர் மடத்தின் சார்பில் வெளியிட்டு வரும் நூற்றுக்கணக்கான (100) புத்தகங்களிலும், ஆயிரக்கணக்கான அறிவிக்கைகளிலும் இருக்கின்றது. குறைந்தது பத்துப் பதினைந்து நாட்களாவது நேரில் வந்து தங்கி அவற்றைப்

படிக்கலாம் அல்லது இரண்டு மூன்று தினங்கள் அவ்வப்போது வந்தும் தங்கிப் படித்துச் செல்லலாம்!

5) தங்களுடைய ஐயங்களுக்குப் பதில் கூறுகின்ற அளவில் பதினெண்சித்தர் மடத்தில் நூற்றுக்கணக்கான சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் இருக்கிறார்கள். தாங்கள் திருநின்றவூர் என்பதால் அம்பத்தூர் வரை இரயிலில் சீசன் டிக்கட் எடுத்துக் கொண்டு தங்களின் ஓய்விற்கு ஏற்ப சில மணித்துளிகள் வந்து தங்கி விளக்கம் பெற்றுக் கூடச் செல்லலாம். இங்கு எழுத்தரும், மற்ற அடியான்களும் எந்த நேரத்திலும் இருப்பார்கள். இரவு 7.00 மணிக்கு மேல் குருதேவரை சந்திக்கலாம். (காலை 7.00 மணி அளவில் கல்லூரிக்கு சென்றுவிட்டு இரவு 7.00 மணிக்குத்தான் இல்லம் திரும்புவார்).

6) தாங்கள் பதினோரு மணி நேரம் வரை தொடர்ந்து கேட்பதற்குரிய அளவில் பதினோரு ஒலிப்பேழைகள் (கேசட்டுகள்) இருக்கின்றன. இன்னும் முப்பது ஒலிப்பேழைகள் பதிவு செய்யத் தயார் நிலையில் உள்ளது. தாங்கள் ரூ.400 அளவில் கொண்டு வந்தால் பதினோரு ஒலிப்பேழைகள் கூட வாங்கிச் செல்லலாம். ரூ.150 வரை அனைத்துப் புத்தகங்களையும் பெற்றுச் செல்லலாம். வசதி குறைவானவராக இருந்தால் சிறுகச் சிறுகக் கூடப் பணம் தரலாம். கவலை வேண்டாம்.

7) ‘இந்து’ என்ற சொல் தமிழ்ச் சொல்லே! இது இளமுறியாக் கண்டத்துள் பிறந்த சொல். பல நூறு சொற்களில் இதற்குப் பொருள் உண்டு.

8) நமது சங்க இலக்கியங்கள் அனைத்தும் கிடைக்கவில்லை. கிடைத்தவற்றில் மதநூல் பற்றியது எதுவும் கிடைக்கவில்லை. வடஆரியர்களின் சூழ்ச்சியால் ‘ஹிந்து’ என்ற ஒரு புதிய சொல் உருவாக்கப்பட்டு ‘இந்து’ என்ற சொல் அழிக்கப்பட்டது. இதை இந்துமதத் தலைவர்களாக உள்ள எவருமே தங்களுடைய சொற்பொழிவுகளில், அறிவுரைகளில் இந்துமதம், ஹிந்துமதம் என்று தலைப்பிட்டுப் பேசுவதில்லை.

9) பதினெண்சித்தர்களுடைய நூல்கள் ஆயிரக்கணக்கில் அச்சாகாமல் பதினெண்சித்தர் மடத்தில் இருக்கின்றன. சென்னை காரணோடைக் கிராமத்தில் உள்ள பதினெண்சித்தர் மடத்தில் இந்துமதம் என்பதின் செயல்விளக்கமாக யாகசாலைகள் நடத்தி, பதினெண்சித்தர்களின் நூல்களில் உள்ள அருளூறு பூசைமொழிகள் ஓதி மந்திரித்து நாள், கோள், மீன், ... பாதிப்புக்கள், மந்திறவாதிகளின் பாதிப்பு, கண்ணேறு, பேய், பிசாசு, ... முதலிய அனைத்தும் நலப்படுத்தப்படுகின்றது.

10) திருமந்திறம், தேவாரம், திருவாசகம் எல்லாம் அருள் விளக்கங்களே. பிறருக்குப் பயன்படாது. எனவேதான், இந்துமதம் வேறு, ஹிந்துமதம் வேறு; தமிழருடையது இந்துமதம், பிருமணருடையது ஹிந்துமதம்; பிருமணர் யாரும் மந்திரித்து யாருக்கும் அருள் வழங்குவதில்லை. இவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும்.

11) பூசை செய்யக் கற்றுக் கொள்ளுங்கள். பிறருக்கு நலம் விளைவிக்க மந்திரிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். வாருங்கள் மானுடரே! கடவுளாகலாம்.

12) தானாகத் தோன்றுகின்ற கடவுள்களும் உண்டு. தோற்றுவிக்கின்ற கடவுள்களும் உண்டு.

13) கடவுளுக்கு பிறப்புண்டு, இறப்புண்டு, பிறப்பிறப்புண்டு.

14) கடவுள்களுக்கும் மொழி, இனம், நாடு என்ற பற்றுப் பாசம் உண்டு. எல்லைகள் உண்டு.

15) அந்தந்தக் கடவுள்களை, அந்தந்த ஊர்களில் கும்பிட்டால் போதும் என்பதுதான் இந்துமதம்.

இப்போதைக்கு இவ்வளவு விளக்கங்கள் போதும். தாங்கள் உண்மையிலேயே தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ்நாட்டிற்கும் இந்துமத வழியாக பகுத்தறிவுப் பூர்வமாகத் தொண்டாற்ற விரும்பினால் நேரில் தொடர்பு கொள்ளுங்கள்.

16) பதினெண்சித்தர் மடத்தில் வாராவாரம் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் மாலையிலும், ஞாயிற்றுக் கிழமைகளில் காலையிலும் பூசைகள் செய்து பொதுமக்களுக்கு மந்திரித்து அருள் வழங்கப்படுகிறது.

17) தங்களுடைய அஞ்சல் வாசகங்கள் மெய்யான உணர்வைப் பெற்றிருப்பதால்; இத்துடன் அ.வி.தி. புத்தகம் ஒன்றும், எங்களது அச்சிட்ட அறிக்கைகள் சிலவும் இணைத்து அனுப்புகின்றோம். இவற்றைப் படித்துத் தெரிந்து கொண்டு பொறுப்போடும், பொறுமையோடும் செயல்படுங்கள்.

18) நாங்கள் இந்து மறுமலர்ச்சி இயக்கம், அருட்பணி விரிவாக்கத் திட்டம், தமிழின மொழி மத விடுதலை இயக்கம், பதினெண்சித்தர் திருச்சபை, ... முதலிய அமைப்புக்கள் வைத்து நாடெங்கும் செயல்படுகின்றோம். தமிழினம், தமிழ்மொழி, தமிழ்நாடு தன்மானம் காக்கப்பட வேண்டுமென்றால் தாங்கள் மந்திரிக்கக் கற்றுக்கொண்டு ஏழை, எளிய, பாட்டாளி, பாமர மக்களுக்கு நலம் விளைவியுங்கள். பலரையும் பதினெண்சித்தர் மடத்தோடு தொடர்பு கொள்ளச் சொல்லுங்கள். எல்லோருக்கும் பத்தி, சத்தி, சித்திகள் தர பதினெண்சித்தர் மடம் காத்திருக்கின்றது. இந்துமதம் வழியாகத்தான் தமிழினம், மொழி, நாட்டு ஒற்றுமைநிலை, உரிமைநிலை, பெருமைநிலை, தனித்தன்மை காக்கப்பட்டிடும்! காக்கப்பட்டிடும்!! காக்கப்பட்டிடும்!!!

**குறிப்பு**:- இவ்வஞ்சல் தங்கள் கைக்குக் கிடைத்ததும் விரைவு அஞ்சல் போல் நினைத்து உடன் பதில் எழுதுங்கள்.

அன்பே சிவம்
ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்

அன்பு
ஞானச்சாரியார் கூறிய கருத்துக்களைத் தொகுத்து எழுதியவர்:
அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம்,
தலைமைப்பீட எழுத்தர்,
வேம்பை சீ.மணி,
16-3-91, மாலை 6 : 31மணி,

**//உண்மை நகல்//**
**//இதன் மூல நகல்: சித்தரடியார் திரு வேம்பை சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# மெய்யான இந்துமதத்தைப் புரிந்து பயனடையுங்கள்

## பதினெண் சித்தர் மடம், பீடம், கருகுலம்

## (G.N.T ரோடு, காரனேடை, சென்னை-67)

1. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய நாட்டுக்குரிய, இனத்துக்குரிய, மொழிக்குரிய முன்னோர்களை மெய்யான பத்தியோடு வழிபட வேண்டும்.

2. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்வுக்குரிய முத்தோர்களை அன்புடன் மதித்துப் பாசத்துடன் போற்றிப் பேணிடல் வேண்டும்.

3. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய பண்பாட்டுக்கும், நாகரிகத்துக்கும், மொழிக்கும், இனத்துக்கும், நாட்டுக்கும் உரியவர்களில் கடவுள் நிலை பெற்றவர்களை மட்டும் வழிபட வேண்டும். ஏனென்றால் இம்மண்ணுலகில் கடவுள் நிலை பெற்றவர்கள் எல்லா மொழியிலும், எல்லா இனத்திலும், எல்லா நாட்டிலும் இருக்கிறார்கள்.

4. கடவுள் ஒருவரே என்று கூறுவது கற்பனை. இக்கற்பனை போன்றதுதான் கடவுள் எங்கும் நிறைந்திருப்பார், எல்லா வல்லமைகளையும் பெற்றிருப்பார், எல்லா மொழிகளையும் புரிந்து கொள்வார் என்ற வாதம்.

5. மனிதர்கள் தாங்கள் ஏற்ற பயிற்சிகளாலும், நோற்ற தவங்களாலும், பெற்ற சித்திகளாலும்தான் பிறவாமை, இறவாமை என்ற முத்தி நிலைகளை பெறுகின்றார்கள். அப்படி முத்தி நிலைகள் பெற்றவர்கள்தான் தங்களுடைய முயற்சிகளால் படிப்படியாக 48 வகையான நிலைகளையும் கடந்து உயர்ந்து கடவுளாகிறார்கள். எனவே கடவுள் நிலை

பெற்றவர்களுக்கு மொழி, இனம், நாடு, அருளாற்றல் எனப்படும் அனைத்துக்கும் குறிப்பிட்ட எல்லை உண்டு.

6. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய குடும்ப தெய்வம், குல தெய்வம், ஊர்த் தேவதைகள், தேவர்கள், நாட்டுக் கடவுள்கள் எனப்படுவர்களைத் தேவைக்கேற்ப வழிபாடு செய்துதான் பயனடைய வேண்டும்.

7. மேற்படி பதினெண்சித்தர்களின் சித்தர் நெறி எனும் சீவநெறியான மெய்யான இந்துமதப்படியே நாடெங்கும் அருட்கோட்டங்கள், யாகச் சாலைகள், அருட்பணி விரிவாக்கத் திட்ட நிலையங்கள் ... முதலியவை அமைத்து பொதுமக்களுடைய அனைத்து வகையான குறைகளுக்கும், பாதிப்புகளுக்கும் பரிகாரங்கள் செய்து தரப்படுகின்றன.

**இந்து மறுமலர்ச்சி இயக்கம்**

**அருட்பணி விரிவாக்கத் திட்டம்**

**தமிழின மொழி மத விடுதலை இயக்கம்**

**//உண்மை நகல்//**

**//இதன் மூல நகல்: ஒரிசா சித்தரடியார் திரு சீ.மோகன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# புத்தர் வாக்கு

**'புத்தர் வாக்கு' என்ற தலைப்பில் 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி குருபாரம்பரியத்தில் உள்ளது.**

தெய்வீகம் என்பது ஒரு மென்மையான நுண்ணிய இனிய சுவைமிக்க இசை. அதை இயற்கையிலேயே கேட்பது அரிது. வண்டின் ஓசையாக (ரீங்காரமாக), கால் சலங்கை ஒலியாக, அருவியோசையாக, இசை முழக்கமாக கேட்டிடும். இதே ஒலிகளைத் தன்னுடைய உடல் எனும் யாழில் {வீணை} எழுப்பும் வல்லமை பெற்றவன்தான் அருளாளன். அந்த வல்லமை பெறுவதுதான் தெய்வீக சித்தி. எனவே, யாழின் நரம்பு அதிகமாக முறுக்கேறினால் விரலை வெட்டிவிடும்; யாழின் நரம்பு தொய்வாக இருந்தால் இசை சரியாகப் பிறக்காது; அதாவது, யாழ் நரம்பு எந்த பக்குவத்துக்கு முறுக்கேற்ற வேண்டுமோ அந்தப் பக்குவத்துக்கு முறுக்கேற்ற வேண்டும். அதுபோல அருளாளன் தன் உடம்பையும், உணர்வையும், அறிவையும் பட்டினி போட்டு விடவும் கூடாது; அளவுக்கு மீறி உண்டு விடவும் விட்டுவிடக் கூடாது. இப்படி செயல்படக் கற்றவன்தான் தெய்வீக சித்தியாளன்; அருளாளன். அவனே அறிவு விழித்த நிலையில் செயல்படும் புத்தன். {சித்தன் என்பவன் பித்தன் நிலைக்கு வந்தவன் = காட்டாறு போன்றவன்}.

**"தன்னை வருத்திக் கொள்பவன் ஞானியல்லன்"**
**"தன்னை வருத்திக் கொள்வது பூசையல்ல"**
**"ஒருவனை வருத்திக் கொள்ளுமாறு சொல்வது கடவுளுமல்ல"**

***மதத்தைப் பற்றிய புத்தரின் மூன்று பெரும் தத்துவங்கள்.***

பாலிமொழியில் தெளிவாக இருக்கும். இவர் 32வது புத்தர்.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: சித்தரடியார் ஓரிசா மோகன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்களின் (கி.பி.785 - 1040)...



மெய்ஞ்ஞானக்கொடி

...பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த **ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்களின் <u>குருவாணைப்படி</u> இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிப் போய்க் கொண்டிருக்கும் கோப்புக்களிலிருந்து வழங்கப்படுகின்றன.



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

"இந்துக்களே! கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கடிய தீட்டு, நெடிய சாபம்."

- குருபாரம்பரிய வாசகம்

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://books.gurudevar.org
https://gurudevar.in
https://gurudevar.org
https://induism.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ10/-